வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-நாராயணசாமி

தேதி 18.11.2025 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

நீரை திறம்பட்ட முறையில் பயன்படுத்தி, நாட்டின் நீர்வளப் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டியது, அனைவரின் கடமை என்று, குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு கூறி உள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி, நாளை, ஆந்திரபிரதேசம் மற்றும் தமிழகத்திற்கு பயணம் மேற்கொள்கிறார்.

உலக அளவிலான தொழில் நுட்பம் மற்றும் புதுமையாக்கத் துறையில் தலைமைத்துவ நாடாக இந்தியா திகழும் என, மத்திய தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் திரு பியூஷ் கோயல் கூறி உள்ளார்.

புதுச்சேரியில் தொடர் மழை நிலவரங்களை எதிர்கொள்ள மாவட்ட நிர்வாகம், முற்றிலும் தயார் நிலையில் உள்ளது.

*நீர் வளம்-முர்மு*

இந்தியாவின் நீர் ஆதாரங்கள், மக்கள் தொகையுடன் ஒப்பிடுகையில் குறைவு தான் என்பதால், நீரை திறன்பட்ட முறையில் பயன்படுத்தி, நாட்டின் நீர்வளப் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல், அனைவரின் கடமை என்று, குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு கூறி உள்ளார். இன்று புதுடெல்லியில் நடைபெற்ற விழாவில், 6-ஆவது தேசிய நீர்வள விருதுகளையும், நாட்டின் முதலாவது ஜல் சஞ்சய்-ஜன் பாகீர்தாரி விருதுகளையும் வழங்கி அவர் உரையாற்றினார். நாட்டில் கடந்த ஆண்டு

தொடக்கப்பட்ட, மக்கள் பங்கேற்புடன் கூடிய நீர் சேமிப்பு திட்டத்தின் கீழ், இதுவரை சுமார் 35 லட்சம் நிலத்தடி நீர் செறிவூட்டல் அமைப்புகள் நிறுவப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். ஜல்சக்தி அமைச்சர் திரு சி ஆர் பாட்டீல், இணை அமைச்சர்கள் திரு ஆர் பி சவுத்ரி, திரு சோமண்ணா உள்ளிட்டோர் விழாவில் கலந்து கொண்டனர். தேசிய நீர்வள விருதுப் பட்டியலில் மாநிலங்களுக்கான பிரிவில் முதல் 3 இடங்களைப் பிடித்த மகாராஷ்டிரா, குஜராத், அரியானா ஆகிய மாநிலங்களுக்கும், சிறந்த மாவட்டங்கள், கிராம பஞ்சாயத்துக்கள், நகராட்சிகள், பள்ளிகள், அமைப்புகள் மற்றும், தனிநபர்களுக்கும் விருதுகள் வழங்கப்பட்டன.

மோடி-கட்டுரை

பருவநிலை மாற்றத்தை சமாளிப்பதற்கான, உலகளாவிய நிதி கட்டமைப்பை, கூடுதல் வெளிப்படைத் தன்மை மற்றும் பொதுவான விதிமுறைகளின் அடிப்படையில் மறுசீரமைப்பதற்கான இந்தியாவின் வாய்ப்புகள் குறித்து, மத்திய அமைச்சர் திரு பூபேந்திர யாதவ் எழுதியுள்ள கட்டுரை ஒன்றை, பிரதமர் திரு நரேந்திர மோடி, சமூக ஊடகத்தில் பகிர்ந்து கொண்டுள்ளார். இந்தியாவில் பசுமைத் திட்டங்களுக்கான உள்நாட்டு நிதி ஒதுக்கீடுகள் தொடர்ந்து அதிகரித்து வருவதும், பருவநிலை நிதி வசதிகள் குறித்த, இந்தியாவின் வகைப் பாட்டியல் வரைவும், இத்துறையில் இந்தியாவின் தலைமைத் துவத்திற்கு சிறந்த எடுத்துக் காட்டுகள் என்றும், எதிர்காலத்தில், திறம்பட்ட நிதிக் கட்டமைப்பு ஒன்றை உலக அளவில் உருவாக்க முக்கிய வழிகாட்டியாக, இவை திகழும் என்றும், பிரதமர் தெரிவித்தார்.

மோடி-தமிழ்நாடு

பிரதமர் திரு நரேந்திர மோடி, நாளை, ஆந்திரபிரதேசம் மற்றும் தமிழகத்திற்கு பயணம் மேற்கொள்கிறார். பிரதமரின் பயணத் திட்டம் குறித்து கூடுதல் விவரங்கள் ........

(வாய்ஸ்)

பிரதமர் திரு நரேந்திர மோடி, நாளை ஆந்திரப் பயணத்தின் போது, புட்டபர்த்தியில் உள்ள சாய்பாபா சமாதியில் வழிபட்ட பின்னர் பகவான் சத்தியசாய் பாபா நூற்றாண்டு விழாக் கொண்டாட்டங்களில் கலந்து கொண்டு, நினைவு தபால் தலை மற்றும் நாணயத்தை வெளியிடுகிறார். பின்னர் அவர் கோவை சென்று, இயற்கை வேளாண்மை பற்றிய தென்னிந்திய உச்சி மாநாட்டை தொடக்கி வைக்கிறார். பிஎம்-கிசான் திட்டத்தின் கீழ் 21-ஆவது தவணையாக மொத்தம் 18 ஆயிரம் கோடி ரூபாய் நிதி உதவிகளை பிரதமர் விடுவிக்கிறார். நாடு முழுவதிலும் 9 கோடி விவசாயிகள் இதனால் பயன் பெறுகிறார்கள். இயற்கை விவசாயத்துடன் தொடர்புடைய பல்வேறு தரப்பினருக்கு இடையிலான பேரவை சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள, இந்த 3 நாள் மாநாட்டில், ரசாயன உரங்கள் இல்லாத, சுற்றுச்சூழலுக்கு ஏற்ற, நீடித்த சாகுபடி முறைகளை விவசாயிகளிடையே பரப்புவது குறித்து, விரிவாக விவாதிக்கப்படும்.

நகர்புற மேம்பாடு

2047-ஆம் ஆண்டிற்குள் முன்னேறிய இந்தியா என்னும் இலக்கை எட்டும் வகையில், நாட்டின் நகரங்களை மேம்படுத்த, மத்திய-மாநில அரசுகள் இணைந்து, கூட்டு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென, மத்திய நகர்புற வளர்ச்சித் துறை அமைச்சர் திரு மனோகர் லால் வலியுறுத்தி உள்ளார். இன்று ஐதராபாத்தில், 6 தென்மேற்கு மாநிலங்களின் நகர்புற வளர்ச்சி குறித்த மண்டல கூட்டத்தில் உரையாற்றிய அவர் மாநிலங்களின் முக்கிய நகர்புற வளர்ச்சி திட்டங்களுக்கு தேவையான ஒத்துழைப்பை மத்திய அரசு வழங்கும் என்றும் உறுதி அளித்தார். நகரங்களை பொருளாதார கேந்திரங்களாக மேம்படுத்த 4 லட்சம் கோடி ரூபாய் அடிப்படை நிதி கிடைக்கும் என்றும் அவர் தெரிவித்தார். நாட்டின் நகர்புற மக்கள் தொகை விரைவிலேயே 50 சதவிகிதமாக அதிகரிக்கும் என்றும், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் நகர்புற வளர்ச்சித் துறையின் பங்கு, 2050-ஆம் ஆண்டிற்குள், 80 சதவிகிதமாக உயரும் என்றும் அமைச்சர் கூறினார்.

*பீகார்*

பீகாரில், புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட தேசிய ஜனநாயக கூட்டணி எம்எல்ஏ-க்கள் நாளை பட்னாவில் கூடி, சட்டப்பேரவைக் குழுவின் தலைவரை தேர்ந்தெடுக்க உள்ளனர். பிஜேபி, ஐக்கிய ஜனதா தளம், லோக் ஜனசக்தி கட்சியின் ராம்விலாஸ் அணி, ஹிந்துஸ்தானி அவாம் மோர்ச்சா, ராஷ்டிரிய லோக் மோர்ச்சா ஆகிய கட்சிகள் பங்கேற்க உள்ளன. தேசிய ஜனநாயக கூட்டணியின் சட்டப்பேரவைக் குழுத் தலைவராக, முதலமைச்சர் திரு நிதிஷ்குமார் மீண்டும் தேர்ந்தெடுக்கப்படுவார் என்றும், அதைத் தொடர்ந்து அவர் ஆளுநரை சந்தித்து, புதிய அரசு அமைக்க உரிமை கோறுவார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கிடையே, புதிய அமைச்சரவையின் கட்டமைப்பு குறித்து, கூட்டணியின் முக்கிய கட்சிகளான, பாரதிய ஜனதாவிற்கும், ஐக்கிய ஜனதா தளத்திற்கும் இடையே பேச்சு வார்த்தைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. புதிய அரசின் பதவி ஏற்பு விழாவை, பட்னாவில் உள்ள காந்தி மைதானத்தில், வரும் 20-ஆம் தேதி நடத்த விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

*தொழில்-வர்த்தகம்*

உலக அளவிலான தொழில் நுட்பம் மற்றும் புதுமையாக்கத் துறையில் தலைமைத்துவ நாடாக இந்தியா திகழும் என, மத்திய தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் திரு பியூஷ் கோயல் கூறி உள்ளார். இன்று புதுடெல்லியில், ஃபிக்கி தொழில்-வர்த்தகக் கூட்டமைப்பின் 98-ஆவது வருடாந்திர பொதுக் குழுக் கூட்டம் பற்றிய முன்னோட்ட நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர், 2047-ஆம் ஆண்டிற்குள் இந்தியாவை மேம்படுத்துவதில் புதுமையாக்கத் துறைக்கு, அதிக முன்னுரிமை அளிக்கப் படுவதாகவும், தொழிலாளர் சக்திக்கு, சரியான திறன்களை வழங்குவதன் மூலமாகவே, இந்த இலக்கை எட்ட முடியும் என்றும், கூறினார். தற்போது உலகின் 4-ஆவது பெரிய பொருளாதாரமாக உள்ள இந்தியாவை 3-ஆவது இடத்திற்கு உயர்த்துவதில், அடுத்த 2 ஆண்டுகள் மிக முக்கியமானதாக இருக்கும் என்று அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

*ஜிஎஸ்டி-மேற்கு வங்கம்*

பிரதமர் திரு நரேந்திர மோடியால் அறிவிக்கப்பட்டு கடந்த செப்டம்பர் 22-ஆம் தேதி முதல் அமலாகி வரும் ஜிஎஸ்டி சேமிப்பு உற்சவம், சமூகத்தின் அனைத்து பிரிவு மக்களுக்கும் பயன் அளித்து வருகிறது. அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி சீர்திருத்தங்களால், மேற்கு வங்கத்தில் பொருளாதாரம் எப்படியெல்லாம் ஊக்கம் பெற்று வருகிறது என்பது குறித்த ஒரு செய்தித் தொகுப்பு.....

(வாய்ஸ்)

புதிய ஜிஎஸ்டி சீர்திருத்தங்களால், மேற்குவங்கத்தில் கைவினைக் கலைஞர்கள், விவசாயிகள் மற்றும் சிறு வணிகர்கள் முக்கிய பலன் பெற்றுள்ளனர். பல்வேறு துறைகளுக்கு வரி விகிதம் குறைக்கப்பட்டுள்ளதால் பொருட்களின் விலை குறைந்து நுகர்வோர் பயன்பெறுவதுடன் உள்ளூர் வணிகர்களின் லாபமும் அதிகரித்துள்ளது. தேயிலை மீதான 18 சதவிகித ஜிஎஸ்டி 5 சதவிகிதமாக குறைக்கப்பட்டுள்ளதால், மேற்கு வங்கத்தில் டார்ஜிலிங் மற்றும் கலிம்பாங் பகுதிகளில் அதிகம் உள்ள தேயிலை சாகுபடியாளர்கள் ஊக்கம் பெற்றுள்ளனர். மாநிலத்தில் 2 லட்சத்திற்கும் மேற்பட்டவர்களுக்கு வாழ்வாதாரமாக திகழும் சணல் துறையிலும், வரிக் குறைப்பினால் ஊக்கம் அதிகரித்துள்ளது. மேற்கு வங்கத்தின் புகழ்பெற்ற பாங்குரா சுடுமணல் பொம்மைகள் மீதான 12 சதவிகித ஜிஎஸ்டி 5 சதவிகிதமாக குறைக்கப்பட்டுள்ளதால் கைவினைக் கலைஞர்களும் உற்சாகம் அடைந்துள்ளனர். இவ்வாறாக மேற்கு வங்கத்தில் நுகர்வோர், உள்ளூர் உற்பத்தியாளர்கள் உட்பட அனைத்து தரப்பினரும், புதிய ஜிஎஸ்டி சீர்திருத்தங்களால் பயன் பெறுவதில் ஐயமில்லை.

*புதுச்சேரி-மை□*

தென்மேற்கு வங்க கடலில் நிலவும் காற்றழுத்த தாழ்வுப் பகுதி காரணமாக, புதுச்சேரியில் கடந்த 24 மணி நேரத்தில், 5 சென்டிமீட்டர் மழை பதிவாகி உள்ளது. காரைக்காலில் 8 சென்டிமீட்டர் மழை பதிவாகி உள்ளது.

தொடர் மழை காரணமாக புதுச்சேரி மற்றும் காரைக்காலில் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. மீனவர்கள் கடலுக்குள் செல்லவில்லை. மழை காரணமாக புதுச்சேரி மற்றும் காரைக்காலில், அனைத்து பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்கு விடுமுறை விடப்பட்டது. மழை நீடிக்கும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளதால், நிலவரங்களை சமாளிக்க மாவட்ட நிர்வாகம் தயார் நிலையில் உள்ளது. தொடர் மழை மற்றும் கடல் சீற்றம் காரணமாக புதுச்சேரியில் தலைமைச் செயலகம் எதிரே உள்ள செயற்கை மணற் பரப்பில் மண் அரிப்பு ஏற்பட்டுள்ளதால், பொது மக்கள் மற்றும் சுற்றுலா பயணிகளின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு, கடற்கரைப் பகுதிகளில், மாவட்ட நிர்வாகம் சிறப்பு பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்துள்ளது. பயிற்சி பெற்ற நீச்சல் வீரர்கள், செயற்கை மணல் பகுதியில் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர். வானிலை சீராகும் வரை பொது மக்கள் கடற்பரைப் பகுதிக்கு செல்ல வேண்டாம் என்றும் மாவட்ட நிர்வாகம் கேட்டுக் கொண்டுள்ளது.

இதற்கிடையே, தென்மேற்கு வங்க கடலில் நிலவும் காற்றழுத்த தாழ்வுப் பகுதி, அடுத்த 24 மணி நேரத்தில், மேற்கு-வடமேற்கு திசையில் மெதுவாக நகரக் கூடும் என்றும், வரும் 22-ஆம் தேதி வாக்கில் தென்கிழக்கு வங்க கடல் பகுதியில், புதிய காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகக் கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வரும் 24-ஆம் தேதி வரை மழை நீடிக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சூறாவளி காற்றுக்கு வாய்ப்பு அதிகம் உள்ள தமிழக கடலோரப் பகுதிகள், வங்க கடல் பகுதிகள் மற்றும் அரபிக் கடல் பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

*புதுச்சேரி-வ உ சி*

கப்பலோட்டிய தமிழன் வஉசி நினைவு நாளான இன்று புதுச்சேரியில், சட்டப் பேரவை எதிரே உள்ள அன்னாரின் திருவுருவச் சிலைக்கு, சட்டப்பேரவைத் தலைவர் திரு ஆர் செல்வம், பொது பணித் துறை அமைச்சர் திரு லட்சுமி நாராயணன், அரசு கொறடா திரு ஏகேடி ஆறுமுகம்,

சட்டமன்ற உறுப்பினர்கள் திரு சாய் சரவணன் குமார், திரு லட்சுமி காந்தன் ஆகியோர், அரசு சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

*நில அளவை*

இந்திய நில அளவைத் துறையின் 175-ஆண்டு சேவைகள் பற்றிய ஓராண்டு கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக, நில அளவைத் துறை சார்பில் ஜெய்பூரில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள, 2 நாள் சர்வதேச கருத்தரங்கை, மத்திய நிலக்கரித் துறை அமைச்சர் திரு கிஷன் ரெட்டி, வரும் வியாழக்கிழமை தொடக்கி வைக்கிறார். நிபுணர் உரைகள் மற்றும் ஆய்வுக் கட்டுரைகளுக்கு அப்பாற்பட்டு, நில அளவை பணிகள் தொடர்பான நவீன தொழில் நுட்பங்கள் குறித்து கண்காட்சி ஒன்றும் கருத்தரங்கில் இடம் பெறும். தொடர்புடைய ஆராய்ச்சிகள் மற்றும் திறன்மேம்பாட்டுப் பணிகளை வலுப்படுத்துவது குறித்து, ஐஐடி உயர்கல்வி நிறுவனங்களுடன், புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் கையெழுத்தாகும் என நிலக்கரித் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

*கீதை-வி□ா*

கீதா ஜெயந்தி தினமான, வரும் டிசம்பர் 1-ஆம் தேதி, அரியானா மாநிலம் குருஷேத்ராவில், சர்வதேச கீதா மகோத்சவம் தொடங்க உள்ளது. பகவான் ஸ்ரீகிருஷ்ணர் அருளிய பகவத் கீதையின் போதனைகளை கொண்டாடும் வகையிலான இந்த ஒரு வார விழாவில், பல்வேறு கலை-கலாச்சார மற்றும் ஆன்மிக நிகழ்ச்சிகள் இடம் பெற உள்ளன. இவ்விழாவின் ஒரு பகுதியாக, நேபாளத்திற்கான இந்திய தூதரகம் சார்பில் இன்று காட்மாண்டுவில் நடைபெற்ற கருத்தரங்கில், நேபாள் சமஸ்கிருத பல்கலைக் கழகம் மற்றும் திரிபுவன் பல்கலைக் கழகத்தின் பேராசிரியர்கள் கலந்து கொண்டு, பகவத் கீதையின் பல்வேறு அம்சங்கள் குறித்து உரை நிகழ்த்தினர்.

நீரை திறம்பட்ட முறையில் பயன்படுத்தி, நாட்டின் நீர்வளப் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டியது, அனைவரின் கடமை என்று, குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு கூறி உள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி, நாளை, ஆந்திரபிரதேசம் மற்றும் தமிழகத்திற்கு பயணம் மேற்கொள்கிறார்.

உலக அளவிலான தொழில் நுட்பம் மற்றும் புதுமையாக்கத் துறையில் தலைமைத்துவ நாடாக இந்தியா திகழும் என, மத்திய தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் திரு பியூஷ் கோயல் கூறி உள்ளார்.

புதுச்சேரியில் தொடர் மழை நிலவரங்களை எதிர்கொள்ள மாவட்ட நிர்வாகம், முற்றிலும் தயார் நிலையில் உள்ளது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

-----------------------------